Name of the Newspaper: Dinamani Date: 8-6-18

## மெட்ரோ ரயில்கள் செயல்பாடு

# மத்திய நகர்ப்புற வளர்ச்சித் துறை செயலர் ஆய்வு



சென்னை கோயம்பேட்டில் இருந்து ஆலந்தூர் வரை மெட்ரோ ரயிலில் சென்று ஆய்வு செய்த மத்திய நகர்ப்புற வளர்ச்சி செயலர் துர்கா ஷங்கர், சென்னை மெட்ரோ ரயில் நிறுவன நிர்வாக இயக்குநர் பங்கஜ் குமார் பன்சால் உள்ளிட்ட அதிகாரிகள்.

**சென்னை, ஜூன் 7:** அனைத்து மெட்ரோ ரயில்களின் செயல்பாடு குறித்த காலாண்டு ஆய்வுக் கூட்டம் சென்னையில் மத்திய நகர்ப்புற மேம்பாட்டுத் துறை செயலர் துர்கா ஷங்கர் மிஸ்ரா தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்றது.

சென்னை கோயம்பேட்டில் உள்ள சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் இந்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. சென்னை மெட்ரோ ரயில் மேலாண் இயக்குநர் பங்கஜ் குமார் பன்சால் மற்றும் பிற மெட்ரோ ரயில்களின் மேலாண் இயக்குநர்கள் இந்த ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

இவர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள மெட்ரோ ரயில்களின் செயல்பாடுகள் குறித்தும், பயணிகளிடம் உள்ள வரவேற்பு, அவர்களுக்கான தேவைகள் குறித்து விளக்கினர். அப்போது பேருந்து, ரயில் நிலையங்களை இணைக்கும் வகையில் விரிவான நடைமுறைத் திட்டத்தை உருவாக்க வேண்டும். அதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய வேண்டும். பின்னர் அதற்கான மாற்றுத் திட்டம் குறித்த ஆய்வு செய்ய வேண்டும். புதிய கண்டுபிடிப்பை மேற்கொள்ளும் மெட்ரோ ரயில் நிறுவனத்திடம் இருந்து பிற மெட்ரோ ரயில் நிறுவனங்கள் அதை கடைப்பிடிக்க வேண்டும் என்பது குறித்து மெட்ரோ ரயில் அதிகாரிகளுக்கு நகர்ப்புற வளர்ச்சித் துறை செயலர் அறிவுறுத்தியதாக மெட்ரோ ரயில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அந்த வகையில் நாட்டில் உள்ள மெட்ரோ ரயில் நிலையங்களிலேயே சுரங்கப் பாதையில் மிகச் சிறிய இடத்தில் நவீனமயத்துடன் அமைக்கப்பட்டுள்ள மெட்ரோ ரயில் நிலையம் நந்தனம் ரயில் நிலையம் தான் என்றும் அதேபோன்று ஒரே இடத்தில் பல வகையான மரங்களை வளர்க்கும் திட்டத்தில் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம்தான் முதன்மையாக விளங்குகிறது என்றும் அந்த அதிகாரிகள் கூறினர்.

கூட்டத்தை அடுத்து துர்கா ஷங்கர் மிஸ்ரா கோயம்பேட்டிலிருந்து ஆலந்தூர் வரை மெட்ரோ ரயிலில் பயணம் செய்தார். அப்போது சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் மேலாண் இயக்குநர், இயக்குநர்கள், உயரதிகாரிகள் உடன் சென்றனர்.

ஆலந்தூர் மெட்ரோ ரயில் நிலையத்தில் இருபுறமும் அமைக்கப்பட்டு வரும் நடைமேம்பாலப் பணிகளை பார்வையிட்ட பங்கஜ்குமார் பன்சால், நந்தனம் மெட்ரோ ரயில் நிலையத்துக்கும் சென்று பார்வையிட்டார்.